P5
CA - 2

## தொடக்கப் பள்ளி

### ஐந்தாம் வகுப்பு – கட்டுரை - தாள் 5

பெயர் - ____________________ தேதி - ____________

கீழ்க்காணும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு , 100 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கதை எழுது. படத்தொடரின் அடியில் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களையும் சொற்றொடர்களையும் நீ இந்தக் கதை எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

1. வகுப்பறையில்
2. பென்சில் சீவ
3. வாய்ப்பைப் பயன்படுத்தி
4. அமைதியாக நகர்த்தினான்
5. திரும்பி இருப்பிடத்திற்கு
6. அறியவில்லை
7. தொப்பென்று விழுந்தான்
8. நகைத்தார்கள்
9. அவமானத்தால்
10. மன்னிப்பு கேட்டான்




231

# தேர்வுத்தாள் - 5

Q1 முதல் Q23 வரையுள்ள வினாக்களுக்கு OAS விடைத்தாளில் சரியான விடையின் எண்ணுள்ள (1, 2, 3 அல்லது 4) நீள்வட்டத்தை நிழலிடு.

## 'அ' பிரிவு

Parent's Signature
Date:

### A1 வேற்றுமை

Q1 முதல் Q6 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. ( 12 மதிப்பெண்கள் )

திரு. பாலன் என்பவர் கால் ஊனமுற்றவர். அவர் ஒரு நாயை வளர்த்தார். அது, அவருடன் தினந்தோறும் காலையில் அவரின் (Q1)_______ அருகிலுள்ள வாடகை உந்துவண்டி நிறுத்தத்திற்குத் துணையாகச் செல்லும். அவரும் அங்குள்ள (Q2)_______ ஏறி வேலைக்குச் செல்வார். பிறகு, அவர் மாலையில் மீண்டும் ஓர் உந்துவண்டியில் ஏறி அதே நிறுத்தத்தை அடைவார். அப்போது, (Q3)_______ நாய் அவருக்காகக் காத்திருக்கும். அது (Q4)_______ மீண்டும் வீட்டிற்குத் துணையாக வரும். ஒரு நாள், வேலை முடிந்து அவர் உணவங்காடிக்குச் சென்றார். (Q5)_______ அறியாத அந்நாய் மாலையில் நிறுத்தத்தில் பல மணி நேரம் காத்திருந்தது. (Q6)_______ நாய் மிகவும் நன்றியுள்ளது. இதற்கு இக்கதையே நமக்கு நல்ல உதாரணம் ஆகும்.

Q1 (1) வீட்டோடு
(2) வீட்டுக்கு
(3) வீட்டை
(4) வீட்டிலிருந்து

( )

Q2 (1) உந்துவண்டியை
(2) உந்துவண்டியில்
(3) உந்துவண்டிக்கு
(4) உந்துவண்டியால்

( )

(அடுத்த பக்கம் பார்க்க)



www.testpapersfree.com

Q3 (1) அவருக்கு
(2) அவரிடமிருந்து
(3) அவரது
(4) அவரால்

( )

Q4 (1) அவரை
(2) அவருடன்
(3) அவரால்
(4) அவருக்கு

( )

Q5 (1) அதற்கு
(2) அதில்
(3) அதோடு
(4) அதை

( )

Q6 (1) பிராணிகளால்
(2) பிராணிகளுக்கு
(3) பிராணிகளுடன்
(4) பிராணிகளில்

( )

(அடுத்த பக்கம் பார்க்க)



23

www.testpapersfree.com

## A2 செய்யுள் / பழமொழி

**Q7 முதல் Q12 வரையுள்ள செய்யுள் / பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. ( 12 மதிப்பெண்கள் )**

Q7 எரிகிற ______________ தூண்டுகோல் வேண்டும்.
(1) நெருப்பானாலும்
(2) விளக்கானாலும்
(3) கரியானாலும்
(4) கட்டையானாலும்
( )

Q8 காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
______________ மானப் பெரிது.
(1) உலகத்தின்
(2) கடலின்
(3) மலையின்
(4) ஞாலத்தின்
( )

Q9 ______________ ஆகாததும் ஆகும்.
(1) அன்பிருந்தால்
(2) வீரமிருந்தால்
(3) மனமிருந்தால்
(4) தன்னம்பிக்கையிருந்தால்
( )

Q10 ஐயம் ______________ உண்.
(1) போட்டு
(2) கொடுத்து
(3) தந்து
(4) இட்டு
( )

Q11 அடக்கம் ஆயிரம் ______________ தரும்.
(1) தங்கம்
(2) வைரம்
(3) பொன்
(4) வெள்ளி
( )

Q12 அறிஞர்க்கு ______________ கற்றுணர்ந்து அடங்கல்.
(1) எழில்
(2) அழகு
(3) சிறப்பு
(4) பொருத்தம்
( )



23

www.testpapersfree.com

B3 தெரிவுவிடைக் கருத்தறிதல்

பின்வரும் கதையைக் கருத்தூன்றிப் படி.

மாலிக் என்பவர் நாகூரில் வாழ்ந்த ஒரு பணக்காரர். அவர் ஏழை, எளியவர்களுக்கு உதவி செய்வார். அதனால், அவரது வீட்டில் எப்போதும் கூட்டமாகவே இருக்கும். அவ்வூரில் சமீர் என்ற சோம்பேறி இருந்தான். அவன் பேச முடியாதவன் போலவும், கை ஊனமுற்றவன் போலவும் நடித்துப் பிச்சையெடுத்துப் பிழைத்தான். அவன், மாலிக்கை ஏமாற்றிப் அதிகப் பணம் பெறுவதற்குத் திட்டமிட்டான்.

ஒருநாள், சமீர் ஒருவகைப் பச்சிலையைத் தன்னுடைய ஒரு கையில் தடவிக்கொண்டான். அந்தக் கை சிறிது நேரத்தில் பெரியதாக வீங்கிவிட்டது. அவன் உடனே மாலிக்கின் வீட்டு வாசலின் முன்னால் அமர்ந்துகொண்டான். வழக்கம்போல் மக்களைக் காண வெளியே வந்த மாலிக், சமீரின் நிலையைக் கண்டு மனமிரங்கினார். அவர் அவ்வூரிலுள்ள இரண்டு மருத்துவர்களை அழைத்துவர ஏற்பாடு செய்தார். சமீர் தான் திட்டமிட்டதற்கு மாறாக நடப்பதைக் கண்டு திடுக்கிட்டான்.

சமீரைப் பரிசோதித்த மருத்துவர்கள் அவன் ஏமாற்றுகிறான் என்பதைத் தெரிந்துகொண்டனர். ஒரு மருத்துவர், "இவன் கையை வெட்டினால் புண் ஏற்படும். அது ஆறுவதற்குப் பல மாதங்கள் ஆகும். புண் ஆறும்வரை நாம் பணக்காரரிடமிருந்து பணம் பெற்றுக்கொண்டே இருக்கலாம்," என்று கூறினார். அதற்கு மற்ற மருத்துவரும் உடன்பட்டார். இவர்களின் உரையாடலைக் கேட்ட சமீர் பயத்தால் நடுங்கினான். அவன், தனது கையை வெட்டவேண்டாம் என்று அவர்களிடம் மன்றாடினான். அதற்கு மருத்துவர்கள், "நீ எங்கள் திட்டத்திற்கு ஒத்துழைத்தால் உன் கையை வெட்ட மாட்டோம்," என்று சொன்னார்கள். சமீர் அதற்குச் சம்மதித்தான். மருத்துவர்களின் ஆலோசனைப்படி நோயாளியைப் போல் படுத்திருந்தான். அவனைப் பார்த்த மாலிக், பணம் எவ்வளவு செலவானாலும் அதைத் தாம் செலுத்திவிடுவதாக மருத்துவர்களிடம் உறுதியளித்தார்.

சமீர் பல மாதங்களாக வீட்டிலேயே நோயாளியாக அடைந்து கிடந்தான். பின் மருத்துவர்கள் மாலிக்கிடம் அவன் குணமடைந்துவிட்டதாகக் கூறித் தங்களுக்குச்





www.testpapersfree.com

சேரவேண்டிய பணத்தைப் பெற்றுக்கொண்டு சென்றனர். மாலிக்கை ஏமாற்ற நினைத்த சமீர், தானே ஏமாந்து போனதை எண்ணி வருந்தினான். இனி, தன் சொந்த உழைப்பால் வாழ்க்கையில் முன்னேற வேண்டுமென மனத்திற்குள் உறுதி பூண்டான்.

(அடுத்த பக்கம் பார்க்க)

**Q13** முதல் **Q17** வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், **OAS** விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள் )

**Q13** ஏழை எளியவர்கள் ஏன் மாலிக்கைத் தேடிச் சென்றனர் ?

(1) அவர் ஒரு பணக்காரர் என்பதால்
(2) அவரிடம் உதவி பெறலாம் என்பதால்
(3) அவரிடம் தங்களின் பிரச்சனைகளைக் கூறலாம் என்பதால் ( )
(4) அவரை எளிதில் ஏமாற்றிவிடலாம் என்பதால்

**Q14** சமீர் ஏன் பிச்சையெடுத்தான் ?

(1) அவன் ஊமையாக இருந்ததால்
(2) அவன் பிச்சையெடுக்க விரும்பியதால் ( )
(3) அவனுக்கு கை முடமாக இருந்ததால்
(4) அவன் உழைக்க விரும்பாததால்

**Q15** சமீர் பச்சிலையை எதற்குப் பயன்படுத்தினான் ?

(1) தன் கையிலுள்ள புண்ணை ஆற்றுவதற்கு
(2) பச்சிலையின் தன்மையைச் சோதிப்பதற்கு
(3) மாலிக்கை ஏமாற்றிப் பணம் பறிப்பதற்கு ( )
(4) தனது கைகளைப் பெரிதாக வீங்க வைப்பதற்கு

**Q16** மருத்துவர்கள் போட்ட திட்டத்தின் குறிக்கோள் என்ன ?

(1) அவனின் கையைத் துண்டிப்பது
(2) தாங்கள் பணம் பெறுவது ( )
(3) சமீரை நடுங்க வைப்பது
(4) சமீரின் சூழ்ச்சியைத் தடுப்பது



24

www.testpapersfree.com

Q17 சமீர் ஏன் மனம் வருந்தினான் ?

(1) தானே ஏமாந்து போனதால்
(2) நோயாளியாக அடைந்து கிடந்ததால்
(3) தனது கை வீங்கியதால்
(4) மருத்துவர்கள் ஏமாந்ததால்

( )

B4 சொற்பொருள்

Q18 முதல் Q20 வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. ( 6 மதிப்பெண்கள் )

Q18 திடுக்கிட்டான்

(1) அதிர்ச்சியுற்றான்
(2) மயங்கினான்
(3) நடுங்கினான்
(4) பயந்தான்

( )

Q19 ஆறுவதற்கு

(1) வெடிப்பதற்கு
(2) குணமடைவதற்கு
(3) மூடுவதற்கு
(4) திறப்பதற்கு.

( )

Q20 மன்றாடினான்

(1) அழுதான்
(2) கேட்டான்
(3) கெஞ்சினான்
(4) கதறினான்

( )



24

www.testpapersfree.com

## B5 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்

பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி:



* புக்கிட் தியோங் சமூக மன்றம்

நடத்தும்



### பல இன சமையல் போட்டி

தேதி : 9.5.2011
நேரம் : காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை

**விதிமுறைகள்**

- நால்வர் கொண்ட குழு, வெவ்வேறு இனத்தவர்கள்
- பல இன சமையல் குறிப்புப் புத்தகங்களைக் கொண்டு வரவும்
- சமையலுக்குத் தேவையான பொருள்களைக் கொண்டு வரவேண்டும்
- சமையல் அடுப்புகளைக் கொண்டு வரவேண்டாம்

**பதிவு - புக்கிட் தியோங் சமூக மன்றம்**

ஏப்ரல் 9ஆம் தேதி முதல் மே 8ஆம் தேதி வரை.
அடையாள அட்டையைக் காட்டவேண்டும்.
போட்டி நாளன்று பதிவு செய்ய முடியாது !

முதல் பரிசு : $ 600 ரொக்கம்
இரண்டாம் பரிசு : $ 400 ரொக்கம்
மூன்றாம் பரிசு : $ 200 ரொக்கம்

ஆதரவாளர்கள் : சிண்டா
: ரகுமான் உணவகம்* புக்கிட் மேரா கிளை நூலகத்திற்கு அருகில் உள்ளது



www.testpapersfree.com

Q21 முதல் Q23 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.
( 6 மதிப்பெண்கள் )

**Q21** இந்தச் சமையல் போட்டி எங்கே நடைபெறும் ?

(1) புக்கிட் தியோங் நூலகத்தில்
(2) புக்கிட் தியோங் சமூக மன்றத்தில்
(3) சிண்டாவில்
(4) ரகுமான் உணவகத்தில்

**Q22** போட்டியில் பங்கேற்போர் எவற்றைக் கொண்டு வரவேண்டும் ?

(1) சமைக்கும் அடுப்புகளை
(2) பல இன உணவுகளை
(2) தங்களுக்குத் தேவையான பொருள்களை
(4) அடையாள அட்டையை

**Q23** ஆர்வமுள்ளோர் எப்போது பதிவு செய்துகொள்ளலாம் ?

(1) ஏப்ரல் 9 - மே 9 ஆம் தேதிவரை
(2) ஏப்ரல் 9 - மே 8 ஆம் தேதிவரை
(3) ஏப்ரல் 8 - மே 9 ஆம் தேதிவரை
(4) ஏப்ரல் 8 - மே 8 ஆம் தேதிவரை



244

www.testpapersfree.com

Q24 முதல் Q41 வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை இந்தப் புத்தகத்தில் எழுது.

'ஆ' பிரிவு

C. ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

பின்வரும் பகுதியில் Q24 முதல் Q28 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. ( 10 மதிப்பெண்கள் )

Q24 திருடனைக் கண்ட நாய் சத்தமாக ______________. அவன் பயத்தில் தலைதெறிக்க ஓடினான். Q24 (    )

Q25 இனியனின் படுக்கை ______________ எப்போதும் சுத்தமாக இருக்கும். அவன் நல்ல பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிப்பான். Q25 (    )

Q26 பாட்டி சமைத்த நண்டு ______________ சுவையாக இருந்தது. அதனால், தாத்தா அதை நன்கு ருசித்து உண்டார். Q26 (    )

Q27 அம்மா மல்லிகை மலர்களை வாங்கி வந்தார். அவற்றின் ______________ வீடு முழுவதும் கமகமத்தது. Q27 (    )

Q28 குழந்தையின் ______________ மிருதுவாக இருக்கும். அதனால், தாய்மார்கள் பொருத்தமான குளியல் பொருளைப் பயன்படுத்துவது நல்லது. Q28 (    )

| | |
|---|---|
| (1) குறைத்தது | (2) குழம்பு |
| (3) அறை | (4) தோல் |
| (5) மணம் | (6) அரை |
| (7) தோள் | (8) மனம் |
| (9) குளம்பு | (10) குரைத்தது |



245

www.testpapersfree.com

D7 முன்னுணர்வுக் கருத்தறிதல்

பின்வரும் பகுதியில் Q29 முதல் Q35 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. ( 14 மதிப்பெண்கள் )

| | |
|---|---|
| மீனவன் ஏரியில் மீன் பிடித்துக் கொண்டிருந்தான். நீண்ட நேரம் ஆகியும் அன்று மீனே சிக்கவில்லை. இருந்தாலும், மீனவன் (Q29)_______ தொடர்ந்து மீன் பிடிப்பதில் கவனம் செலுத்தினான். | Q29 ( ) |
| சிறிது நேரத்தில், சிறிய மீன் ஒன்று வலையில் ( Q30 )_______. | Q30 ( ) |
| அந்தச் சிறிய மீனைப் பிடித்து (Q31)_______ போட்டான். அப்போது, | Q31 ( ) |
| அம்மீன், "நான் மிகவும் சிறிய மீன். இப்பொழுது என்னால் உனக்குப் பெரிய அளவில் (Q32)_______ இல்லை. எனவே, என்னைத் | Q32 ( ) |
| தண்ணீரில் விட்டுவிடு. நான் (Q33)_______ வளர்ந்தவுடன் என்னைப் பிடித்துக்கொள்," என்று கூறியது. | Q33 ( ) |
| மீனவன், 'நீ சொல்வதும் நன்றாகத்தான் இருக்கிறது. நீ சிறிய மீன் என்பதால் உன் பேச்சைக் கேட்டு உன்னைத் தண்ணீரில் விட்டுவிட்டால், நீ பெரிய மீனாக (Q34)_______ விடலாம். ஆனால், நீ | Q34 ( ) |
| மீண்டும் என்னிடம் சிக்கிடுவாய் என்பது நிச்சயம் இல்லையே!" என்றான். "ஆகையால், என்றோ (Q35)_______ பொருளுக்காகக் | Q35 ( ) |
| காத்திருந்து இன்று கிடைத்ததை விடுவது அறிவற்ற செயல்," என்று கூறி மீனவன், மீனைக் கூடைக்குள் போட்டான். | |

| | | |
|---|---|---|
| (1) கோபத்துடன் | (2) பெரிதாக | (3) துள்ளியது |
| (4) கூடையில் | (5) உயரமாக | (6) பலன் |
| (7) பொறுமையுடன் | (8) சிக்கியது | (9) படகில் |
| (10) கிடைக்கும் | (11) வளர்ந்து | (12) உணவு |



244

www.testpapersfree.com

8 சுயவிடைக் கருத்தறிதல்

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படி.

பல வருடங்களுக்கு முன் திரு. அலி கப்பலில் அரேபியாவிற்குப் பயணம் செய்து கொண்டிருந்தார். கப்பலில் பல நாடுகளையும் சேர்ந்த பயணிகள் நிறைந்து இருந்தனர். அவர் ஒவ்வொரு பயணியையும் கூர்ந்து நோக்கி, அவர்களின் நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டிருந்தார். அதனால், அவர் யாருடனும் உரையாடவில்லை.

பயணிகளில் எழுபது வயது மதிக்கத்தக்க ஒரு பெரியவர், திரு. அலியின் கவனத்தை ஈர்த்தார். அந்தப் பெரியவர் எப்பொழுதும் நூல்களைப் படித்துக் கொண்டிருந்தார். அவர் யாருடனும் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. திரு. அலி அவருடன் பேச விரும்பினார். அவர் பெரியவரிடம் சென்று "ஐயா! உங்களை நான் தொடர்ந்து கவனித்து வருகிறேன். ஓயாமல் படித்துக் கொண்டே இருக்கிறீர்கள். நீங்கள் யார்? அப்படி என்ன தான் படிக்கிறீர்கள்?" என்று கேட்டார். " நான் ஒரு விஞ்ஞானி. எனக்குப் பதினேழு மொழிகளில் புலமை உண்டு. இப்பொழுது பதினெட்டாவது மொழியாக அரேபிய மொழியைப் பயின்று, ஓரளவு தேர்ச்சியும் பெற்று விட்டேன்", என்றார் பெரியவர்.

திரு.அலி சிரித்துக் கொண்டே, "ஐயா! உங்களுக்கோ வயது அதிகமாகி விட்டது. இந்த நிலையில் பல மொழிகளைப் படித்து என்ன பயன்? இறைவழிபாட்டில் முழுமையாக இறங்கினால் சொர்க்கத்திற்குப் போகலாம். உங்களுக்குச் சொர்க்கத்திற்குப் போக ஆசை இல்லையா?" என்று கேட்டார். "இல்லை. என்னைப் பொறுத்தவரை சொர்க்கத்திற்குப் போக நினைப்பது சுயநலம். ஒருவருடைய வாழ்க்கை, மற்றவர்களுக்குப் பயனாக அமைய வேண்டும். அதனால் தான், நான் பல மொழிகளைக் கற்று, பிற மொழிகளிலுள்ள அறிவியல் நுணுக்கத்தைத் திரட்டி, என்னுடைய தாய்மொழியில் நூல்களாக வெளியிடுகிறேன். அரேபியாவின் புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளை என் தாய்மொழியில் நூலாகக் கொண்டு வரவே, நான் இப்பொழுது அரேபிய நூலைப் படித்துக் கொண்டு இருக்கிறேன்," என்று பெரியவர் பதிலளித்தார். அதிலிருந்து தமக்காக ஒரு சொர்க்கக் கதவை திறப்பதை விட, ஆயிரமாயிரம் அறிவுக் கதவுகளைத் திறப்பதே சிறந்ததது என்று பெரியவர் எண்ணியதையும் மனிதர்களுக்குச் சேவை செய்வதே சிறந்த சேவை என்று அவர் கருதியதையும் புரிந்துகொண்ட திரு. அலி அந்தப் பெரியவருக்கு நன்றி கலந்த வணக்கத்தைக் கூறி விடைபெற்றார்.



www.testpapersfree.com

36 முதல் 41 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது.
( 20 மதிப்பெண்கள் )

36. திரு அலி எந்த நாட்டிற்குப் பயணம் செய்து கொண்டிருந்தார்? ( 2 ம)

37. திரு.அலி மற்றவர்களிடம் பேசாமல் இருந்ததற்குக் காரணம் என்ன ? ( 3 ம )

38.பெரியவர் எதனால் திரு. அலியின் கவனத்தை ஈர்த்தார்? ( 3 ம )



www.testpapersfree.com

39) பெரியவர் பல மொழிகளைக் கற்பதால் பயனில்லை என்று ஏன் திரு. அலி கருதினார்?
(4)

40) பெரியவர் ஏன் பல மொழிகளைக் கற்றார்? (4)

41) பெரியவர் சொன்ன பதில் திரு அலிக்கு எதனைப் புரிய வைத்தது ? (4)

249

www.testpapersfree.com

CA-2

P -5 தேர்வுத்தாள் -5

திரு பாலன் ஒரு கால் ஊனமுற்றவர்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) 2 | 2) 2 | 3) 3 | 4) 2 | 5) 4 | 6) 4 |
| 7) 2 | 8) 4 | 9) 1 | 10) 4 | 11) 3 | 12) 2 |
| 13) 2 | 14) 4 | 15) 3 | 16) 2 | 17) 1 | 18) 1 |
| 19) 2 | 20) 3 | 21) 2 | 22) 2 | 23) 2 | 24) 10 |
| 25) 3 | 26) 2 | 27) 5 | 28) 4 | 29) 7 | 30) 8 |
| 31) 4 | 32) 6 | 33) 2.. | 34) 11 | 35) 10 | |

36) திரு அலி அரேபியாவிற்கு பயணம் செய்து கொண்டிருந்தார்.

37) திரு அலி ஒவ்வொரு பயணியையும் உன்னிப்பாக நோக்கி, அவர்களின் நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டிருந்தார். அதனால் அவர் யாரிடமும் பேசவில்லை.

38) பெரியவர் ஓயாமல் நூல்களைப் படித்துக் கொண்டிருந்தார். அவர் யாருடனும் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை.அதனால் அவர் திரு அலியின் கவனத்தை ஈர்த்தார்.

39) பெரியவருக்கு அதிக வயதாகி விட்டதால் அந்நிலையில் பல மொழிகளைக் கற்பதில் பயனில்லை என்று திரு அலி கருதினார்.

40) பெரியவர் பல மொழிகளைக் கற்று, பிற மொழிகளிலுள்ள அறிவியல் நுணுக்கத்தைத் திரட்டி தன்னுடைய தாய்மொழியில் நூல்களாக வெளியிட்டார். ஒருவருடைய வாழ்க்கை மற்றவர்களுக்குப் பயனாக அமைய வேண்டும் என்பதாலேயே பிற மொழிகளைக் கற்றார்.

41) பெரியவர் சொன்ன பதில் ஒருவர் சுயநலமாக இருப்பதை விட மனிதர்களுக்குத் தொண்டு செய்வதே சிறந்த சேவை என்பதனை திரு அலிக்குப் புரிய வைத்தது.



www.testpapersfree.com

PRIMARY SCHOOL
SEMESTRAL ASSESSMENT 2
PRIMARY 5

Name :____________________________ (        )

Class : Primary 5__________________

Date : __________________

Name of Tamil Language Teacher : __________________________

Total Time for Booklets A and B: 1hour 40 minutes

INSTRUCTIONS TO CANDIDATES

1. Do not turn over this page until you are told to do so.
2. Follow all instructions carefully.
3. Answer all questions.

| | | |
|---|---|---|
| BOOKLET A | | 46 |
| BOOKLET B | | 44 |
| TOTAL | | 90 |

________________________
Parent's signature/Date

251

www.testpapersfree.com